


சென்னை மாநிலக்கல்லூரி மாணவிகள் அண்ணா அறிவாலயம் – கலைஞர் கருவூலம், பேராசிரியர் க. அன்பழகன் ஆய்வு நூலகத்தை நேற்று (23.9.2025) பார்வையிட்டனர். மாணவர்களுக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பெண் ஏன் அடிமையானால் புத்தகத்தை வழங்கினார். கழக மாணவர் அணி மாநில துணைச் செயலாளர் தமிழ் கா.அமுதரசன், சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துபாய் வி.ஆர். விஜய், தமிழ் மாணவர் மன்றம் தலைவர் (மாநிலக்கல்லூரி) ஈஸ்வர மூர்த்தி , செல்வி ரோஜா, வேல்ஸ் கல்லூரி நன் மாறன், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி மாணவர் அணி அமைப்பாளர் வி.தனசேகர் ஆகியோர் உடன் இருந்தனர்.



சென்னை கலைவாணர் அரங்க வளாகத்திலுள்ள மாநில செய்தி நிலையக் கூட்டரங்கில், நேற்று (22.09.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் தஞ்சாவூர் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடனான பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை செயலாளர் வே.ராஜாராமன், துறை இயக்குநர் மரு.இரா.வைத்தி நாதன், கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) இரா.பாஸ்கரன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரவாயல் தெற்குப் பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, செப். 24-

மதுரவாயல் தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் காரம்பாக்கத்தில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் இன்று (24.09.2025 - புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில் பகுதி கழக அவைத் தலைவர் P.M.செல்வராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

ஆகவே, இக்கூட்டத்திற்கு மதுரவாயல் தெற்குப் பகுதிக்குட்பட்ட தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதுபோது

1. 26.09.2025 அன்று துணை முதலமைச்சர் அவர்கள் வருகை

2. கழக ஆக்கப் பணிகள்

# செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மண்டல இணை இயக்குநர்கள் – மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, செப்.24-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், செய்தி மக்கள் தொர்புத் துறையின் சென்னை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மண்டலங்களின் இணை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடனான பணி ஆய்வுக் கூட்டம் சென்னையில் 22.09.2025 மற்றும் 23.09.2025 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் பணி ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-

அரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து திட்டங்கள் குறித்து கடைகோடி மக்களுக்கு சென்று சேரும் வகையில் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும். பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் அரசு செயல்படுத்தி வரும் எண்ணற்றத் திட்டங்களைப் பற்றி தெரியப்படுத்த வேண்டும்.

அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களின் மூலம் பயன்பெறும் பயனாளிகளை சந்தித்து அவர்களின் முன்னேற்றம் மற்றும் திட்டங்களின் பயன் குறித்து கேட்டறிந்து அவற்றை சமூக ஊடகங்கள் வாயிலாக மக்களுக்கு கொண்டு செல்ல வேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், மருத்துவமனைகள், உள்ளிட்ட பொதுமக்கள் அதிகம்கூடும் இடங்களில் அரசின் முக்கியத் திட்டங்கள் குறித்து புகைப்படங்கள் வைக்கப்பட வேண்டும்.

மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் தமிழுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் தொண்டு செய்தவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த புகைப்படங்கள் பொதுமக்கள், மாணவர்கள் அறியும் வகையில் வைக்கப்பட வேண்டும். அனைத்து மாவட்டங்களிலும் உள்ள நினைவகங்களை தொடர்ந்து கண்காணித்து, பராமரிக்கப்பட வேண்டும்.

உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின் உள்ளிட்ட திட்டங்களின் முகாம்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இம்முகாம்களில் குடும்ப அட்டைகள் உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசிய கோரிக்கைகள் உடனுக்குடன் தீர்க்கப்பட்டு வருகிறது. இந்த முகாம்களில் பயன்பெறும் பயனாளிகளின் வீடியோக்களை சமூக ஊடகங்களில் பதிவேற்றி அனைத்து மக்களும் பயன் பெறும் வண்ணம் தங்களது பணிகளை சிறப்பாக செய்ய வேண்டும்".'

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) இரா.பாஸ்கரன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தாம்பரத்தில் கழகத்தினருக்கு நிதி - நல உதவிகள்!

## எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. வழங்கினார்!

தாம்பரம், செப். 24 -

தாம்பரம் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ச.இராஜேஷ் மற்றும் தாம்பரம் மேற்கு இளைஞரணி துணை அமைப்பாளர் ச.சுரேஷ் ஆகியோரது தாயாரும் முன்னாள் வட்ட செயலாளர் பி.சர்தார் மனைவியும், தாம்பரம் நகர கழக துணை செயலாளருமான நினைவில் வாழும் சுப்புலட்சுமி சர்தார் அவர்களின் 5,வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியை முன்னிட்டு கழக மகளிர் அணி மற்றும் பொதுமக்களுக்கு புத்தாடைகளும் மற்றும் தமிழக முதல்வர் அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு என்கின்ற முழக்க வாக்கியத்தின் படி அறிவித்த திட்டத்தின் மூலமாக கழகத்தில் பெருமளவு உறுப்பினர்களை சேர்க்க மிக சிறப்பாக பணியாற்றிய 26 கழகத் தோழர்களுக்கு ஒவ்வொருவருக்கும் தலா 20 கிராம் வெள்ளி நாணயத்தையும் நலிந்த பொது மக்களுக்கும் மற்றும் வயது முதிர்ந்து ஆண்கள் என 500 பேருக்கு புடைவை ,வேட்டி, லுங்கி மற்றும் மதியம் அறுசுவை உணவையும் தாம்பரம் மாநகர செயலாளரும் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ வழங்கினார்.



அதுபோது மேயர்க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டல தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், ஆதிமாறன், பகுதி செயலாளர் பெருங்களத்தூர் எஸ்.சேகர், எம்.சி, லயன் சங்கர், மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். கோபி, எல்.பெரியநாயகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ்,துணை அமைப்பாளர்கள் வீ.கார்த்திக், இன்ஸமாம், எஸ்.ஜி.கருணாகரன், கி.வேல்மணி,ஜா.ரவிக்குமார், இரா.செல்வகுமார், மங்களபுரம் பாபு, ஆர்.செல்வகுமார், ஆர்.சஞ்சீவி, டி.ஆர்.முரளி, எல்காட். சீனு,சரவணன், வினோத், லோகேஷ், ஓம்பிரகாஷ், இரா.தேவராஜ், யுவராஜ், செல்லா, பாலா, மதன், கதிரவன், மணிகண்டன், சக்தி, ரிஸ்வான், குருமணி, நவீன், பிரவீன்குமார், ராஜி, பென்ஜமின், குணசேகரன், மகேந்திரன், வெங்கடசேன், நாகராஜ், சசிதரன், லோகேஷ், அப்பு ஹரி, குமரவேல், கௌசல்யா கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சி ஏற்பாடு ரா. இலக்கியா செல்வி ராஜேஷ் .

### க.செல்வம் எம்.பி.- சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. - ஆர்.கே.தேவேந்திரன் பங்கேற்பு

# வாலாஜாபாத் வடக்கு ஒன்றியம் பரந்தூரில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்!

## ஒன்றியச் செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு அறிக்கை!

காஞ்சிபுரம், செப். 24 -

வாலாஜாபாத் வடக்கு ஒன்றியம் பரந்தூரில் இன்று உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெறுகிறது. இதில் கழகத்தினர் பொது மக்களை அழைத்து வந்து பயன்பெறச் செய்யும்படி ஒன்றியச் செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் இன்று (24-9-2025) காலை 9:30 மணிக்கு தமிழ்நாடு பசுமை தினத்தை முன்னிட்டு வனத்துறை சார்பில் வேலம்மாள் பள்ளி அருகில் அருகில் பரந்தூர் ரோட்டில் மரக்கன்று நடும் விழா துவக்கி வைத்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மேலும் ‘உங்களுடன் ஸ்டாலின்’ நிகழ்ச்சி காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் வடக்கு ஒன்றியம் மேல் பொடவூர் ஊராட்சியில் இன்று (2409 2025 புதன்கிழமை) காலை 10:00 மணி அளவில் வீனஸ் கார்டன் பரந்தூரில் 1) மேல்பொடவூர், 2) சிறுவள்ளூர், 3) சிறுவாக்கம் ஆகிய

ஊராட்சிகளுக்கு உட்பட்ட பொதுமக்களுக்கு உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சி மக்களின் குறைகளை மனுக்களாக பெற்று கோரிக்கை மனுக்களுக்கு தீர்வு காணும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது

இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆணைக்கிணங்க காஞ்சிபுரம் நாராளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க.செல்வம்

காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. ஏழிரசன் எம்.எல்.ஏ., ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் எஸ்.ராஜலட்சுமி குஜராஜ் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

இதில் மற்றும் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் குறைகளை கோரிக்கை மனுக்களை பெற்று குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கிடைக்க பெறாத தாய்மார்களுக்கு உடனடியாக தீர்த்து வைக்க உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு ஒன்றிய கழக செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு கேட்டுக்கொண்டுள்ளார்.



மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு151, போரூர், ஆற்காடு சாலை, கிருஷ்ணவேணி கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் நிகழ்ச்சியை காரம்காக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. பார்வையிட்டு பொதுமக்களுக்கு தேவையான சேவையினை உடனடியாக நிறைவேற்றிக் கொடுத்தார். இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், எஸ். அருணாசலம், இரா.பால்பாண்டியன், ச.சங்கர்கணேஷ், எம்.சி., வி.விஜயன், ஆர்.சேகர், பி.ரகு, எம். லோகேந்திரபாபு, எம்.சுந்தர், இ.செந்தில்குமார், கே.குமார், கிருஷ்ணன், ஆர்.நாகராஜ், எஸ்.ராஜா, கிறிஸ்டி பெர்னாண்டோ, எம்.ஐயப்பன், பி.மணிகண்டன், கே.கோவிந்தராஜ் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# மதுரவாயல் வடக்கு பகுதி கழக ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் அறிவிப்பு!

சென்னை, செப். 24-

மதுரவாயல் வடக்குப் பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அன்பு தளபதி மற்றும் கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணைக்கு இணங்கவும் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அண்ணன் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி நேற்று (24/09/2025) மாலை 5.00 மணி அளவில் பகுதி கழக அலுவலகத்தில் (நொளம்பூரில்) பகுதி கழக அவைத்தலைவர் ஆர். கர்ணல் அவர்களின் தலைமையில், பகுதி கழக நிர்வாகிகள் ஆ. மாலினி, தீ. பாலாஜி, எம்.ஏ.செந்தில் சுரேஷ், ம. உதயகுமார் ஆகியோரின் முன்னிலையில் பகுதி கழக ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட அமைப்பாளர், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

1. 26.09.2026 அன்று துணை முதல்வர் தொகுதிக்கு வருகை.

2. கழக ஆக்கப் பணிகள் குறித்து

இவ்வாறு நொளம்பூர் வே.ராஜன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அஞ்சலி செலுத்துகிறார்! முன்னாள் எம்.எல்.ஏ.

# திருவொற்றியூர் டி.கே.பழனிசாமியின் 25ஆம் ஆண்டு நினைவு நாள்!

## கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. பங்கேற்பு! தி.மு.தனியரசு வேண்டுகோள்!

சென்னை, செப். 24 -

திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும் முன்னாள் நகரச் செயலாளருமான டி.கே.பழனிசாமி அவர்களின் 25 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி இன்று (24.9.2025) காலை 9 மணிக்கு டி.கே.பி. திருமண மாளிகையில் நடைபெறுகிறது.



திருவொற்றியூர் நகரக் கழக முன்னாள் செயலாளரும் முன்னாள் நகர மன்றத் தலைவரும் முன்னாள் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மக்கள் தொண்டன் டி.கே.பழனிசாமி அவர்களின் 25 ஆம் ஆண்டு நினைவு நாளை முன் னிட்டு டி.கே.பி.திருமண மாளிகையிலுள்ள அன்னாரின் திருவுருவச்சிலைக்கு சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பகுதி அவைத் தலைவர் ஆர்.சி.ஆசைத்தம்பி செய்துள்ளார்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் தியாகராார் நகர். எஸ்.மோகன் ஆகியோர் பங்கேற்று அஞ்சலி செலுத்த உள்ளனர். ஆகையால் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகி கள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிக் கழக செயலாளரும் மண்டலக் குழுத் தலைவருமான தி.மு.தனியரசு கேட்டுக் கொண்டுள்ளார்.



தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலையில், கழக அயலக மாநில துணைச் செயலாளர் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதிஇளம்சுருதி முன்னிலையில், செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ் முன்னிலையில், எஸ். அமிர்தலிங்கம் தலைமையில், செம்பாக்கம் தெற்கு பகுதி திமுக 39 வது வார்டு சார்பில் கழக செயல்வீரர் கூட்டம் நடைபெற்றது, இக்கூட்டத்தில் எதிர்கொள்ள இருக்கிற 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய பணிகள், மற்றும் தொகுதியில் மேற்கொள்ள வேண்டிய பணிகளை குறித்து ஆலோசிக்கப்பட்டது, உடன் வட்டக் கழகச் செயலாளர் லோ. தனவந்தன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### புழல் 23-வது வட்டத்தில் 2-ஆவது கட்டமாக

# உங்களுடன் ஸ்டாலின் முகாம்! பொதுமக்கள் பயன் பெறுவீர்!

## வட்ட செயலாளர் பி.எஸ். சந்துரு வேண்டுகோள்!

சென்னை, செப்.24

புழல் 23-வது வட்டத்தில் 2ஆவது கட்டமாக, உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சி 13 துறைகள், 43 சேவைகளைக் கொண்டு அதிகாரிகள் மனுக்களை பெறவுள்ளனர். எனவே பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெறுவீர் என வட்ட செயலாளர் பி.எஸ்.சந்துரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புழல் 23-வது வட்டம், மண்டலம் 3-இல், உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சி கடந்த மாதம் 19-ஆம் தேதி நடைபெற்றதை தொடர்ந்து, இன்று (24.9.2025, புதன்கிழமை) 2ஆவது கட்டமாக ராணி சங்குபதி மேரேஜ் ஹால் இல் நடைபெற்றுள்ளது.

எனவே பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு வட்ட செயலாளர் பி.எஸ். சந்துரு, துணை செயலாளர் வழக்கறிஞர் டி. ராஜாராம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



சென்னை மேற்கு மாவட்ட கழக துணை செயலாளர் ஆர்.என்.துரை அவர்களின் தாயார் ஆர்.கண்ணம்மாள் ரங்கநாதன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 21/09/2025 ஞாயிற்றுக்கிழமை வி.பி.ராமன் ( இலாயிட்ஸ் ) சாலை, வி.எம்.தெரு சந்திப்பில், சென்னை மேற்கு மாவட்ட கழகட செயலாளர் நே. சிற்றரசு எம்.சி. அன்னாரின் படத்துக்கு மலர் ஆஞ்சலி செலுத்தி, சமபந்தி விருந்தினை துவக்கி வைத்தார்கள், உடன், டிகே.எஸ். இளங்கோவன், ஏ.ஆர்.பி.எம். காமராஜ்,எம்.சி மரு.அ.சுபேர்கான், வி.பி. பொன்னரசு, வி.என்.ராஜன், ரவிராஜ் குமார், மரு. எஸ்.ஏ.எஸ்.அபிஸ்வுல்லா து. விக்டர், அகஸ்டியன்பாபு, ம.தயாநிதி, சி.தினகரன், க.வே.மோகன் ஐ.சி.எப். எம்.சங்கர், ஜெ.விஜயகுமார், கே.ஜி செந்தில்குமார், என்.ரவி, எஸ்.சசிகுமார், ஏ.பி. வேலு, கலந்துக் கொண்டனர்.